Deposition of Witness

(Chapter XXV BNSS )

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No.213/2022

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.2**

| | | | |
|---|---|---|---|
| Name: | பாபு | Calling: | ஓய்வு |
| Father's Name/ Husband's Name: | கொக்ரையா | Religion: | |
| Village: | குடியாத்தம் | Age: | 71 |
| Taluk: | குடியாத்தம் | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 20.05.2026 நேரம்: 12.16 PM

(எதிரி ஆஜர்.)

பு.த.சா.2 எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.

ஆஜர் எதிரியை தெரியும், நாங்கள் இருவரும் ஐந்து வருடமாக ஒன்றாக வேலை செய்தோம். எதிரிக்கு மாத வருமானம் எவ்வளவு என தெரியுமா என்றால் தெரியாது. பாலாஜி, ஜெயச்சந்திரன், ரங்கநாதன் யார் என தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி நபர்கள் எதிரியின் மீது குடியாத்தம் நீதிமன்றத்தில் காசோலை வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. ரூ.1,00,000/-ஐ எதிரிக்கு எந்த வகையில் வாங்கிக்கொடுத்தேன் என்றால் வீட்டு வேலைகளுக்காக வாங்கி கொடுத்தேன். எதிரி வீடு கட்டுவதையோ அல்லது அவர் லோன் போட்டதையோ நான் பார்த்தேனா என்றால் இல்லை. எதிரி பற்றி முழுவிவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். என்னிடம் எதிரியினுடைய 16 காசோலைகள் உள்ளது என்றால் சரியல்ல. நான் எதிரியினுடைய பழக்கத்தை தவறாக பயன்படுத்தி ஆள் வைத்து கடத்தி சென்று அவரிடமிருந்த வாட்ச், செக்புக், நகைகளை பறித்துவிட்டேன் என்றால் சரியல்ல. எனக்கு கார்த்திக், சரண்யா, சரண்யாவின் கணவர் யாரையும் தெரியாது என்றால் சரியல்ல. எதிரி யாரிடமும் கடன் வாங்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் எனக்கு அது பற்றி தெரியாது, நான் என்ன செய்தேனோ அதை சொல்கிறேன். நான்

எதிரியிடமிருந்து பறித்து சென்ற செக்புக்கை வைத்து தான் கார்த்திக்கை வழக்கு தாக்கல் செய்ய வைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

சாட்சி கையொப்பம்
(ஓம்.) பாபு

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K
Date: 2026.05.21 16:47:54 +0530